

விருதுநகர் அருப்புக்கோட்டை வடக்கு தெற்கு தி.மு.க. ஒன்றிய சார்பில் பூத் கமிட்டி கூட்டம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. முகவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை மானாமதுரை சேர்மன் மாரியப்பன் கென்னடி வழங்கினார். உடன் மாவட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷ், பொன்ராஜ், நகர செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி ஆகியோர் இருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டத்தின் 2ஆம் தொகுப்பு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மதுரை கிழக்கு தொகுதி, வீரபாண்டி ஊராட்சியில் அய்யர் புதூர் கிராமத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து தொகுப்புகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மேற்கு ஒன்றிய சேர்மன் வீரராகவன், துணை சேர்மன் கார்த்திக் ராஜா, மாவட்ட கவுன்சிலர்கள் நேருபாண்டியன், சித்ரா தேவி முருகன், ஊராட்சி மன்ற தலைவர்கள் சுகப்பிரியா விஜயகுமார், சரண்யா ராஜவேல், கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், சிறைச்செல்வன், ஆசைக்கண்ணன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், அதிகாரிகள், பொதுமக்கள் என திரளானோர் பங்கேற்றனர்.

### மகாராஷ்டிராவிலிருந்து

# அனைத்துத் தொழில்களும் குஜராத்திற்கு மாற்றம்!

## ஒன்றிய அரசு மீது மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

மும்பை, நவ.16–

மகாராஷ்டிராவில் இருந்து அனைத்து தொழில்களையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு குஜராத்துக்கு மாற்றுவதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலையொட்டி புனேவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்து கொண்டு பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது, பேசிய கார்கே, ஒன்றிய பாஜக அரசு, மகாராஷ்டிராவில் இருந்த அனைத்து தொழில்களையும், குஜராத்திற்கு மாற்றுவதாகவும், இதனால் மகாராஷ்டிராவில் பெரும் பொருளாதார இழப்பு, வேலையின்மையை ஏற்படுவதாக குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் சோயாபீனுக்கு குவிண்டாலுக்கு 7 ரூபாய் வழங்கப்படும் என உறுதியளித்தார். நாடாளுமன்ற தேர்தலில் 400க்கும் மேற்பட்ட இடங்களில் பாஜக வெல்லும் என கூறுகிறார்கள்.

தற்போது அக்கட்சி 2 ஊன்றுகோலைச் சார்ந்துள்ளதாக விமர்சித்தார்.

பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் மூடப்பட்டு விற்பனை செய்யப்பட்டதால் கடந்த 10 ஆண்டுகளில் 5 லட்சம் பேர் வேலை இழந்துள்ளதாக கூறிய கார்கே, மாநிலத்தில் வேலையில்லா திண்டாட் டம் நிலவி வரும் நிலையில் இரண்டரை லட்சம்



காலிப்பணியிடங்களை அரசு நிலுவையில் வைத்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.






ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி கள்ளிமந்தயம் ஊராட்சி மன்ற கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டுதல் மற்றும் நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் சாலைகள் தரம் உயர்த்த அடிக்கல் நாட்டுதல், கள்ளிமந்தயம் வருவாய் ஆய்வாளர் கட்டிடம் திறப்பு விழா உள்ளிட்ட புதிய திட்டப் பணிகளை துவக்கி வைத்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.



மதுரை மத்திய தொகுதி மகபூப்பாளையத்தில் ஒருங்கிணைந்த தையல் தொழில் கூடத்தில் ஓராண்டு தையல் தொழில் முனைவோர் பயிற்சியை நிறைவு செய்த 11 பெண்களுக்கு சான்றிதழ் மற்றும் இலவசமாக நவீன தையல் இயந்திரத்தை தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் வழங்கினார். உடன் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், துணை மேயர் நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், ராஜ்மஹால் நிறுவனத் தலைவர் சிவப்பிரியா, மத்திய மண்டல தலைவர் பாண்டிச் செல்வி, மாமன்ற உறுப்பினர் மகாலட்சுமி அழகு சுந்தரம், எல்லீஸ் நகர் பகுதி செயலாளர் பி.கே.செந்தில் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

### வயநாடு பேரழிவை

# தேசிய பேரிடராக அறிவிக்க ஒன்றிய அரசு மறுப்பதா?

## காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி கண்டனம்

புதுடெல்லி, நவ.16-

வயநாடு பேரழிவை ஏற்படுத்திய நிலச்சரிவுகள் இருந்தபோதிலும், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக மோடி தலைமையிலான பா.ஜ.க. ஒன்றிய அதை தேசிய பேரிடராக அறிவிக்க மறுப்பதாக பிரியங்கா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

வயநாடு மக்களவை தொகுதி காங்கிரஸ் வேட்பாளரும், அக்கட்சி பொதுச்செயலாளருமான பிரியங்கா காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில், வயநாடு பேரழிவை சீரமைப்பதற்காக கேரள அரசு நிவாரண தொகையை ஒன்றிய அரசு இதுவரை வழங்கவில்லை என குற்றம் சாட்டினார்.

தேவைப்படுபவர்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை மறுக்கிறது, இது வெறும் அலட்சியம் அல்ல, நினைத்துப் பார்க்க முடியாத இழப்பை சந்தித்தவர்களுக்கு ஒரு அதிர்ச்சியூட்டும் அநீதி என கடுமையாக விமர்சித்



துள்ளார். வயநாடு பேரழிவை நேரில் பார்வையிட்டபோதும் பிரதமர் மோடி, அரசியல் காழ்ப்புணர்ச்சியால், கேரள அரசுக்கு பேரிடர் நிவாரணம் வழங்க மறுப்பதாக குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேபோல இமாச்சலப் பிரதேச மக்களுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை என சாடினார். இது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது, இதுபோன்ற பேரிடர் பாதிப்புகள் கடந்த காலங்களில் ஒருபோதும் அரசியலாக பார்க்கப்படவில்லை என்றும் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

வயநாடு நிலச்சரிவு விபத்தை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என, கேரளாவுக்கு ஒன்றிய அரசு கடிதம் எழுதியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை மனிதாபிமானமற்ற செயல் என்று கேரள அமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**கேரள அமைச்சர் கண்டனம்**

வயநாடு நிலச்சரிவு விபத்தை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என்று கேரளா அரசுக்கு ஒன்றிய அரசு கடிதம் எழுதி உள்ளது.

வீடுகளை இழந்த பொதுமக்களுக்கு இழப்பீடு வழங்கவும், புனரமைப்பு திட்டங்களுக்கும் 3 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று கேரளா அரசு கோரியிருந்தது. ஆனால், எந்த தொகையும் இதுவரையும் வழங்கப்படவில்லை. ஆண்டு தோறும் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மாநில பேரிடர் நிதியிலுள்ள 390 கோடி ரூபாயை வயநாடு பேரிடருக்கு பயன்படுத்தும்படி கடிதத்தில் ஒன்றிய அரசு கூறியுள்ளது.

இதற்கு வருவாய் துறை அமைச்சர் ராஜூ கடும் எதிர்ப்பு கூறியுள்ளார். ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு மனிதாபிமானமற்ற செயல் என்று தெரிவித்துள்ளார்.

வயநாடு விபத்தை அதி தீவிர விபத்து என்று L3 பிரிவில் கூட சேர்க்க மறுப்பதாகவும், கேரள மக்களுக்கு எதிராக ஒன்றிய அரசு சவால் விடுவதாக கூறியுள்ளார்.

இதனிடையே, வயநாட்டுக்குப் பிறகு மழை, புயல் பாதிப்பு ஏற்பட்ட ஆந்திராவுக்கு சிறப்பு நிதி வழங்கிய பாஜக அரசு கேரளாவுக்கு ஏன் வழங்கவில்லை? என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது. ஒன்றிய அரசின் இந்தப் புறக்கணிப்புக்கு எதிராக தீவிர போராட்டம் நடத்தப்படும் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் தெரிவித்துள்ளார்.



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் வியாழன் தோறும் மாநகராட்சி மக்களின் கோரிக்கைகளையேற்று அதற்கு உடனடி தீர்வு கிடைக்கும் வகையில் மக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்று வருகிறது. அதன்படி மக்கள் குறைதீர்க்கும் முகாம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முகாமில் சொத்து வரி, குடிநீர் வரி, பட்டா பெயர் மாற்றம், சாலை வசதி, பயணிகள் நிழற்குடை, ஆக்கிரமிப்பு அகற்றம் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை அளித்தனர். அந்த மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். முகாமில் உதவி ஆணையர் பாலசுந்தரம், நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், உதவி செயற்பொறியாளர் ரகுராமன் உட்பட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.